மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.58/2024

வாக்குமூலம்: வா.சா.1 – வடிவேல்
21.11.2025:

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : பிரதிவாதி எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் என் மனைவியின் தங்கை ஆவார். நான் வழக்கு சொத்தை எப்போது கிரையம் பெற்றேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. வழக்குச் சொத்தில் பிரதிவாதி எத்தனை வருடத்திற்கு முன்பு குடிவந்தார் என்றால் சுமார் 8 வருடத்திற்கு முன்பு குடிவந்தார். 11.11.1998 ஆம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கிய ஒரு வருடத்திலேயே கடந்த 1999 ல் பிரதிவாதி தாவா சொத்தில் குடிவந்தார் என்றால் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை கடந்த 1999 ஆம் ஆண்டு குடிசை அமைத்து குடிவந்தார் என்றால் சரிதான். நான் தான் குடிசை அமைத்து கொடுத்தேன். எதற்காக குடிசை அமைத்து கொடுத்தேன் என்றால் பிரதிவாதி அவரது குழந்தைகளுடன் இருந்ததால் குடிசை அமைத்துக் கொடுத்தேன். அந்த சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் நானும் தாவா சொத்து பக்கத்தில் தான் குடியிருந்தேன். தாவா சொத்திற்கு கிழக்கே எனக்கு பரம்பரையாக வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த வருடம் வீடு கட்டியுள்ளேன் என்றால் வருடம் ஞாபகமில்லை. பிரதிவாதி தாவா சொத்தை என்னிடம் கிரையம் செய்து தருமாறு கேட்டாரா என்றால் என்னிடம் கையெத்து கேட்டார். நான் கையெழுத்து போடவில்லை. தற்போது வரை தாவா வீட்டில் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் 7 வருடங்களுக்கு முன்பு தான் குடியிருந்து வந்தார். 1999 ஆம்

ஆண்டிலிருந்து தாவா வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், அதற்கு நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 20.01.2024 ஆம் தேதி தான் நான் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த 2024 ஆம் வருடத்திற்கு முன்பு பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியே அனுப்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2025.11.07 15:44:44 +0530

District Munsif,
Palani.